## DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Dandapani |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மிடாப்பாடியில் வசித்து வருகிறேன். டீ கடை வைத்துள்ளேன். 15.09.2019 ம் தேதி மாலை 4.30 –4.45 மணிக்கு பெதப்பம்பட்டிக்கு உறவினர் வீட்டு கல்யாணத்திற்கு செல்வதற்கு பெட்ரோல் அடிப்பதற்காக மடத்துக்குளம் யூனியன் ஆபிஸ்க்கு அருகே கிழக்கிலிருந்து மேற்கே சென்ற நான் வடக்கு பக்கம் உள்ள பெட்ரோல் பங்கிற்கு திரும்பும்போது கிழக்கிலிருந்து வந்த கார் TN 49 W 9 எண் கொண்ட கிரே கலர் கார் என் மீது மோதி நான் தூக்கி வீசப்பட்டேன். நீதிமன்றத்தில் ஆஜர் எதிரி தான் கிரே கலர் காரை ஓட்டி வந்தார். அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் கொடுத்தார்கள். 5 நிமிடத்திற்குள் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். போலீசார் அங்கு வந்து போக்குவரத்தை சரி செய்தார்கள். என்னை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் மேல் சிகிச்சைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு வேண்டாம் என்று தனியார் மருத்துவமனை கணேஷ் டாக்டரிடம் சென்றுவிட்டேன். நான் 18 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை மறு நாள் விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பொதுவாக ரோட்டை கடக்கும் போது வாகனத்தை நிறுத்தி இருபுறமும் பார்த்து தான் கடக்க வேண்டும் என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது பின்னால் வாகனம் வந்ததா என்பதை பார்க்காமல் திரும்பியதால் தான் காரின் இடது முன் பக்கம் பட்டு நான் கீழே விழுந்தேன் என்றால் சரியல்ல. கணேஷ் மருத்துவரிடம் இரண்டு இரு சக்கர வாகனம் மோதி தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திடீரென்று வாகனத்தை திருப்பியதால் தான் எனது வாகனத்தின் வலது பக்கம் மற்றும் எதிரி வாகனத்தின் இடது முன் பக்கம் சேதம் ஏற்பட்டதாக வாகன ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கும் எனது வாகனத்திற்குக் இடது பக்கம் சேதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர நின்று பார்த்து ரோட்டை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவோ அஜாக்கிரதையோ காரணம் இல்லை நான் தான் கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/−Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Chandrasekaran |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் திருப்பூரில் வசித்து வருகிறேன். எல்.ஐ.சி ஏஜென்ட்டாக உள்ளேன். **15.09.2019** ம் தேதி நான் வேறு ஒரு விசேஷத்திற்கு வந்துவிட்டு எனது சகலையான அ.சா.1 வீட்டில் இருந்தேன். நாங்கள் இருவரும் விசேஷத்திற்கு செல்வதற்காக மாலை **4.45** மணிக்கு மிடப்பாடியில் இருந்து பெதப்பம்பட்டிக்கு கிழக்கில் இருந்து மேற்கே எனது சகலை **TVS** இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் **HONDA SHINE** பைக்கில் சென்று கொண்டிருந்த போது பெட்ரோல் அடிப்பதற்காக சென்ற போது விபத்து நடந்தது. எங்கள் கிழக்கில் இருந்து மேற்காக பின்னால் வந்த கிரே கலர் கார் மோதியதில் அ.சா.1 கீழே விழுந்துவிட்டார். ஆம்புலன்ஸ் வரவழைத்து மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். மேல் சிகிச்சைக்கு உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் தனியார் மருத்துவமனைக்கு சென்று விட்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) போலீசார் விபத்து நடந்த மறு நாள் அ.சா.1 யை விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை. நான் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். மிடாப்பாடியில் இருந்து அ.சா.1 அவரது வண்டியிலும் நான் பின்னால் எனது பைக்கிலும் பெதப்பம்பட்டி சென்றோம் என்றால் சரிதான். TVS இளரக வாகனம் என்றும் பைக் வேகமாக செல்லும் வாகனம் என்றும் அவர் பின்னால் நான் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவர் பின்னால் கொஞ்ச தூரம் கழித்து சென்றேன் விபத்து நடந்த பின்பு அங்கு சென்றேன். விபத்தை நேரடியாக பார்க்கவில்லை நான் சென்ற போது கீழே விழுந்து கிடந்தார்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்